*செ.வெ.எண்:301* *நாள்:08-05-2018*

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்கள் மக்களின் நலன் கருதி அற்புதமான **“அம்மா திட்டம்”** **(AMMA – Assured Maximum Service to Marginal People in All Villages)** என்ற திட்டத்தினை அறிவித்துள்ளார்கள். பொதுமக்கள் அரசு அலுவலகங்களுக்கு பயணம் செய்து நீண்ட நேரம் காத்திருந்து மனுக்களை அளிப்பதால் ஏற்படும் நேரம், செலவு மற்றும் பல்வேறு இன்னல்களை போக்குகின்ற வகையில் மக்கள் வசிக்கும் கிராமத்திற்கே வருவாய்த்துறை அலுவலர்கள் சென்று குறைகளை கேட்கும் வகையில் **“அம்மா திட்டம்”** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில், பிரதி **வெள்ளிக்கிழமை** அன்று வருவாய்த்துறை சார்பில் ஒரு கிராமத்தில் முகாமிட்டு, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அனைத்து துறையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்கும் வகையில் தமிழகம் முழுவதும் ஒவ்வொரு வருவாய் வட்டத்தில் மக்களைத் தேடி வருவாய்த்துறை மூலம் **“அம்மா திட்டம்”** செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் வரும் வெள்ளிகிழமை **11.05.2018** அன்று கீழ்கண்ட வட்டத்தில் எதிரே குறிப்பிட்டுள்ள குறுவட்டத்தில் அடங்கியுள்ள வருவாய் கிராமங்களில் **“அம்மா திட்ட முகாம்”** நடைபெற தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **வட்டம்** | **குறுவட்டம்** | **வருவாய்கிராமம்** |
|---|---|---|---|
| 1. | நான்குநேரி | களக்காடு | மேல்கரை<br>இனாம் இடையன்குளம்<br>தென்னீர்குளம்<br>சிங்கிகுளம்புதுக்கிராமம் |

மேற்கண்ட கிராமங்களுக்கு சிங்கிகுளம்புதுக்கிராமத்தில் வைத்து 11.05.2018 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 5.00 வரை நடைபெறவுள்ள ”அம்மா திட்டத்தின்” போது பொது மக்கள் கீழ்க்கண்ட தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனுக்களை அளிக்கலாம்.

1.இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், **2.** முதியோர் உதவித்தொகை மற்றும் நிறுத்தம் செய்யப்பட்ட முதியோர் உதவித்தொகை மறுபரிசீலனை விண்ணப்பம் உள்பட சமூக பாதுகாப்புத் திட்டங்கள், **3.** உழவர் பாதுகாப்பு அட்டைகள், **4.** நிலத்தாவாக்கள் **5.** சாலை வசதிகள் மற்றும் குடிநீர் வசதி போன்ற மேற்கண்ட சேவைகள் தங்களது கிராமத்திற்கு கிடைத்திடும் வகையில், வருவாய்த்துறை மக்களுக்கு ஆற்றி வரும் சேவையை துரிதப்படுத்தப்பட்டு மக்கள் பயனடைய இதன் மூலம் வழிவகை செய்யப்படுகிறது. எனவே, பொதுமக்கள் இம்முகாமில் தகுந்த ஆவணங்களுடன் தங்கள் கோரிக்கை குறித்த மனுக்களை முகாமில் ஆஜராகி நேரில் அளித்து பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சந்தீப் நந்தூரி இ.ஆ.ப.,அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி